## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி
## அ.வ.எண்.5/2019

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 26 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துளசிராமன் | மதம் | : இந்து |
| த/பெ | : மாணிக்கம் | ஜாதி | : -- |
| வயது | : 45 | கிராமம் | : சக்கரமல்லூர் |
| தொழில் | : கட்டுமான வேலை | வட்டம் | : திருத்தணி |

**26.02.2026**
**பி.வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. இந்த வழக்கில் நான் 4ம் பிரதிவாதி என்றால் சரிதான். வாதி இந்த வழக்கில் என்ன பரிகாரம் கேட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்து தவிர சக்கரமல்லூர் கிராமத்தில் எங்கள் குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களின் புல எண்கள் தெரியுமா என்றால் தெரியும். புல எண்.85, புல எண்.87, 37, 31 ஆகிய வீட்டு மனைகள் உள்ளது. இது தவிர வேறு விவசாய நிலங்கள் உள்ளதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படுவது நான் இந்த வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை என்றால் சரிதான். எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தாரா என்றால் நான் சொல்லி என் வழக்கறிஞர் தயார் செய்தார்.

2. புல எண்.60/1, 60/2, 60/3, 60/7, 60/8, 60/9, 60/10, 60/11, 60/12 ஆகிய சொத்துக்கள் அனைத்தும் என் குடும்பத்தை சேர்ந்த சொத்துக்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சொத்துக்களில் எது என் தாத்தா போக முனுசாமி ரெட்டி கிரையம் வாங்கினார், எது அவரது பூர்வீக சொத்துக்கள் என்ற விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 2ல் தாவா சொத்துக்கள் பாகம் பிரித்து

கொண்டார்கள் என்று நான் சொல்லியுள்ளேன் என்றால் ஆமாம். மேற்சொன்ன புல எண்களில் எந்த புல எண் என் பெரியப்பா கணேச ரெட்டி ஒதுக்கப்பட்டது, எந்த சொத்து மற்றொரு பெரியப்பா கிருஷ்ணமூர்த்திக்கு ஒதுக்கப்பட்டது, எந்த சொத்து என் அப்பா மாணிக்கத்திற்கு ஒதுக்கப்பட்டது, எந்த சொத்து என் சித்தப்பா ராமமூர்த்திக்கு ஒதுக்கப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் சொத்து அடையாளம் தெரியும். ஆனால் எனக்கு புல எண்கள் சொல்ல தெரியாது.

3. எனது பிரமாண வாக்குமூலத்தில் எந்த புல எண் யாருக்கு ஒதுக்கப்பட்டது என்பதை சொல்லவில்லை என்றால் என்னுடைய புல எண்ணை சொல்லியுள்ளேன். மற்றவர்களுடையது சொல்லவில்லை. இந்த வழக்கிற்கு முன்பு என் சித்தப்பா முனிரத்தினம் இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.107/2011 என பாகப்பிரிவினை கோரி பாக வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றாலும் அதில் நானும் தரப்பினர் என்றாலும் சரிதான். ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்று முனிரத்தினத்தின் வழக்கு தள்ளுபடி ஆன விவரம் தெரியுமா என்றால் தெரியும். எனது பாகத்திற்கு ஒதுக்கிய புல எண் தெரியுமா என்றால் 60/3ல் ஒரு பகுதி, 60/2, 60/8 ஆகும். கிணறான 60/12லும் எங்களுக்கு ஒரு பாகம் வரும்.

4. மேற்படி புல எண்கள்தான் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றால் ஆமாம். நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் 60/3, 60/10, 60/12 ஆகியவை கிருஷ்ணமூர்த்திக்கு ஒதுக்கப்பட்ட சொத்து என்றாலும் 1987லேயே கிருஷ்ணமூர்த்தி என் அத்தை கணவரான நீலகண்டன் என்பவருக்கு கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் தெரியும். 1987லேயே நீலகண்டனுக்கு கிருஷ்ணமூர்த்தி விற்ற சொத்தை என் அப்பா பி.வா.சா.ஆ 1 மற்றும் 2ன்படி எனக்கும் என் தம்பிக்கும் 2010ல் செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளார் என்றால் என் அத்தை கணவரிடம் கிருஷ்ணமூர்த்தி சிறிது பணம் வாங்கியிருந்தார். அதை வைத்துக்கொண்டு கிருஷ்ணமூர்த்திக்கு விட்ட பாகத்தை பத்திரம் போட்டுவிட்டார்.

5. 1987லேயே என் அத்தை கணவர் நீலகண்டன் கிரையம் வாங்கிய விவரம் என் அப்பாவிற்கு தெரியும் என்றால் சரிதான். நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும் முன்பாவது அந்த ஆவணங்களை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. தற்போது சொத்து மதிப்பு ஏறிவிட்டதால் என் அத்தை கணவர் கிரையம் வாங்கிய சொத்தை என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் இல்லை. அதே போல் வாதிகள் வாங்கிய ஆவணத்தில் வில்லங்கம் ஏற்படுத்த வேண்டும் என்றுதான் பி.வா.சா.ஆ 1, 2 ஆவணங்களை என் அப்பா ஏற்படுத்தியுள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்கள் என் அப்பாவிற்கு விடப்பட்டு நாங்கள் அனுபவித்து வந்தோம் என்பதை காட்ட வரி ரசீதுகள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. என் சிறிய தகப்பனார் முனிரத்தினம் தாக்கல் செய்த வழக்கில் நான் சாட்சியம் அளித்தேனா என்றால் இல்லை.

6. இந்த வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு முன்பு பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்வதற்கு முன்போ பிராதை வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. அ.வ.எண்.107/2011ல் என் சித்தப்பா தாக்கல் செய்த வழக்கிலும் என் அப்பா எங்களுக்கு எழுதி வைத்த தான பத்திரத்தை ரத்து செய்ய பரிகாரம் கோரவில்லை என்றாலும் வாதி கிரையம் வாங்கிய ஆவணத்தையும் நீலகண்டனின் ஆவணத்தையும் ரத்து செய்ய பரிகாரம் கோரியிருந்தார் என்றாலும் சரிதான். சக்கரமல்லூர் கிராமத்தில் சொத்து மதிப்பு அதிகமாகிவிட்டதால்தான் ஏற்கனவே கிரையம் கொடுத்த சொத்துக்களையும் சேர்த்து பாகப்பிரிவினை வழக்கை முனிரத்தினம் தாக்கல் செய்தார் என்றாலும் நான், ராமமூர்த்தி ஆகியோர் சேர்ந்து ஆவணங்களை தயார் செய்தோம் என்றாலும் சரியல்ல.

7. என் சிறிய தகப்பனார் ராமமூர்த்தி என்ன என்ன புல எண்களை தனது மகனுக்கு எழுதினார் என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலத்திலோ எனது எதிர்வழக்குரையிலோ என் சிறிய தகப்பனார் ராமமூர்த்தி என்ன ஆவணங்கள் எழுதி வைத்துள்ளார் என்ற

விவரத்தை நான் குறிப்பிடவில்லை என்றாலும் அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரிதான். வாதி ஆவணங்களை தாக்கல் செய்துள்ளார். நான் எனக்குள்ள ஆவணங்களை மட்டும்தான் தாக்கல் செய்துள்ளேன். புல எண்.60/7, 60/1, 60/9 ஆகிய சொத்துக்கள் யார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்பது தெரியுமா என்றால் 60/1 கிருஷ்ணமூர்த்தி, ராமர் ஆகிய இருவருக்கு வரும். 60/1, 60/2, 60/3 மொத்தம் 5 நபர்களுக்கு சொத்து வரும். 60/1, 60/2, 60/3ன் விஸ்தீரணம் தெரியுமா என்றால் 60/1, 60/2 சேர்த்து 1 ஏக்கர் 10 செண்ட் ஆகும். 60/3ன் விஸ்தீரணம் தெரியாது.

8. 60/3 சொத்து என் அப்பா பாகத்திற்கு ஒதுக்கப்பட்டது என்றால் 60/2ல் அதிக இடமும் 60/3ல் ஒரு பகுதியும் என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டது. மேற்படி இரண்டு புல எண்களில் எது சாலையின் அருகே உள்ளது என்றால் 60/1, 60/2, 60/3 ஆகும். 60/1, 60/2, 60/3 சாலையின் அருகே உள்ளதாலும் அதன் சொத்து மதிப்பு அதிகமானதாலும் 2010ல் புல எண்.60/3 என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்டதாக புல எண்.60/1, 60/2 ராமமூர்த்திக்கு ஒதுக்கப்பட்டதாகவும் வேண்டுமென்றே நாங்கள் ஆவணங்களை உற்பத்தி செய்துள்ளோம் என்றால் அவ்வாறு நாங்கள் எதுவும் செய்யவில்லை. எங்களுக்கு விடப்பட்ட சொத்துக்களை மட்டும்தான் அவ்வாறு செய்தோம். 2010ல் என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதும்போது எனக்கு என்ன வயது என்றால் எனக்கு தற்போது வயது 45 ஆகும். 2010ல் 30 வயதிருக்கும்.

9. என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதும்போது நான் என் அப்பாவுடன் சென்றேனா என்றால் நான் சென்றேன். பொதுவாக சொத்து குறித்து ஆவணம் தயார் செய்யும்போது வில்லங்கம் போட்டு பார்ப்பது வழக்கம் என்பதால் என் அப்பா தான செட்டில்மெண்ட் எழுதும்போது வில்லங்கம் போட்டு பார்த்தாரா என்றால் எனக்கு அது தெரியாது. என் அப்பா எழுதி கொடுத்தார். நாங்களும் கையெழுத்து போட்டு வாங்கி கொண்டோம். அந்த தான செட்டில்மெண்ட்டில் யார் யார் சாட்சி கையெழுத்து போட்டார் என்றால் மூர்த்தி என்ற ஒருவரும், என் அப்பாவுக்கு தெரிந்த மற்றொரு நபரும் சாட்சி

கையெழுத்து செய்தார்கள். மற்றொரு நபர் யார் என்று எனக்கு தெரியாது. பொதுவாக ஆவணம் எழுதும்போது சிட்டா, அடங்கல் உள்ளிட்ட வருவாய் ஆவணங்களை சமர்பிப்பது வழக்கம் என்றால் என் அப்பா 2வது குழந்தை என்பதால் அவர் பெயரில் எந்த வருவாய் ஆவணங்களும் இல்லை. எனவே வருவாய் ஆவணங்களை ஏற்படுத்த வேண்டும் என்பதற்காக சும்மா இந்த ஆவணத்தை எழுதினார்.

10. என் அப்பா ஆவணம் எழுதிய பின்பாவது நாங்கள் பட்டாவை என் பெயருக்கு மாற்றினாரா என்றால் நான் ஜமாபந்தியில் மனு கொடுத்தேன். அந்த மனு திரும்ப வந்துவிட்டது. ஏற்கனவே வாதி பெயருக்கு பட்டா மாறிவிட்டதால் நாங்கள் கொடுத்த பட்டா மாறுதல் மனு திரும்ப வந்துவிட்டது என்றால் வாதி பெயருக்கு மாறியது எனக்கு தெரியாது. நாங்கள் வாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கில்தான் வாதி கிரையம் வாங்கிய சொத்தை எங்களுக்கு எழுதி வைத்தார் என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த 2019க்கு முன்பு வழக்கு சொத்தை மாணிக்கம் சாகுபடி செய்தார் என்பதற்கு ஏதாவது வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. வாதி இந்த வழக்கை தாக்கல் செய்த பின்பு புல எண்.60/1, 60/2, 60/8ஐ வாதி வாங்கிய கிரையம் செல்லாது என்று நான் ஏதேனும் வழக்கு தாக்கல் செய்தோமா என்றால் இல்லை.

11. என் மாமா நீலகண்டன் கிரையம் வாங்கிய விவரமும், வாதி கிரையம் வாங்கிய விவரமும் எனக்கு தெரியும் என்றாலும் அதனால்தான் நாங்கள் எந்த வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும் அப்படி இல்லை. நாங்கள் எங்கள் பாகத்தை அனுபவித்து கொண்டிருந்தோம் யாரும் நிலத்திற்கு வரவில்லை, அளக்கவில்லை, விவாசயம் செய்யவில்லை. அ.வ.எண்.107/2011 தாக்கல் செய்த பின்புதான் வாதி கிரையம் வாங்கிய விவரம் எங்களுக்கு தெரியும். அ.வ.எண்.107/2011ல் இந்த வாதி எந்த வருடம் மனு செய்து வழக்கில் தரப்பினராக சேர்ந்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 8ல் **"2011ம் வருடமே வாதியின் சொத்து உரிமை**

**குறித்து திருத்தணி சார்பு நீதிமன்றத்தில் பிரச்சனை வழக்கு தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் அன்றிலிருந்து 3 வருட காலத்திற்குள் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும்"** என்று எதனடிப்படையில் நான் சொல்கிறேன் என்றால் அதன் பின்பு நாங்கள் பயிர் செய்தோம். அதன் பின்பு என் சித்தப்பா முனிரத்தினம் வழக்கு இருப்பதால் நாங்கள் பயிர் வைக்க கூடாது என்று பிரச்சனை செய்தார். அதன்பின்பு நாங்கள் பயிர் வைப்பதை நிறுத்திவிட்டோம்.

12. 3 வருட கால அவகாசத்திற்குள் வழக்கு தாக்கல் செய்ய வேண்டும் என்று எந்த அடிப்படையில் சொல்கிறேன் என்றால் தெரியவில்லை. வாதி கௌதமிக்கு அ.வ.எண்.107/2011ன் சங்கதிகள் 2018ல்தான் தெரிய வந்தது என்றாலும் அதன் பின்பு வாதி அமெரிக்காவில் இருந்து வந்து தனது தந்தைக்கு 2018ல் பொது அதிகாரம் கொடுத்து அதனடிப்படையில் ஒரு தரப்பு மனு செய்து வாதி வழக்கை நடத்தினார் என்றால் அவர் உடனே தாக்கல் செய்யாமல் காலம் கடத்தி தாக்கல் செய்துள்ளார். வாதி கௌதமிக்கு அ.வ.எண்.107/2011 விவரங்களும், எங்கள் குடும்பத்தில் நாங்கள் ஏற்படுத்திய ஆவணங்கள் குறித்த விவரமும் 2018ல்தான் தெரிய வந்து இந்த வழக்கை 3 ஆண்டுகளுக்கு முன்பே தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அதனால் இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்படாது என்றாலும் சரியல்ல.

13. பிரமாண வாக்குமூலம் பத்தி 9ல் வாதி விளம்புகை பரிகாரம் கோராததால் வழக்கு செல்லத்தக்கது அல்ல என்று நான் கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றாலும் வாதி முறையான கிரைய தொகை பெற்று பட்டா மாற்றி அனுபவித்து வருவதால் விளம்புகை பரிகாரம் கோர வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து இன்றுவரை விவசாயம் செய்யாமல் கரம்பாக உள்ளது என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு அவர் கோரிப்படி தீர்ப்புசெய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(மறு விசாரணை இல்லை)